இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 09-10-2024

# மெரினாவும் மகாமகமும்!

**எங்காவது பிணம் விழாதா, அதை வைத்து ஆட்சியைக் குறை சொல்ல வழி பிறக்காதா என்று அலையும் ஜென்மங்களும் இருக்கத்தான் செய்கின்றன.**

**சென்னையில் நடைபெற்ற விமானப் படை சாகச நிகழ்வை நடத்தியது இந்திய விமானப் படை. இதற்கு அவர்கள் கேட்டதை விட அதிகப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தது தமிழ்நாடு அரசு. திரண்ட கூட்டம் என்பது 15 லட்சம் பேருக்கு மேல். மிகக்கடுமையான வெயில் காரணமாக 5 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். வெயில் காரணமாக ஏற்பட்ட நீர்ச் சத்து குறைபாடு காரணமாக இந்த உயிரிழப்புகள் நடந்துள்ளன என்பதை மருத்துவர்களே ஒப்புக் கொண்டுள்ளார்கள்.**

அக்டோபர் 6 ஆம் தேதி இருந்த வெயிலின் தாக்கம் குறித்து ‘பூவுலகின் நண்பர்கள்’ அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையைப் படித்தாலே பதற்றம் ஏற்படுகிறது.

“அக்டோபர் 6 ஆம் தேதியன்று சென்னை நுங்கம்பாக்கத்தில் பதிவான அதிகபட்ச வெப்பநிலை 34.3 C ஆகும். வெய்யிலின் தாக்கம் அதிகம் இருந்ததிற்கு முக்கிய காரணம் Wet Bulb Temperature. அதாவது வெயிலுடன் அதீத ஈரப்பதமும் சேரும்பொழுது அது உடம்பில் வெயிலின் தாக்கத்தை அதிகரிக்கிறது.

அக்டோபர் 6 ஆம் தேதியன்று சென்னையின் வெப்பநிலை 34.3C, காற்றின் ஈரப்பதம் 73% ஆகவும் இருந்துள்ளது. இதை வைத்துப் பார்த்தால் சென்னையில் wet bulb temperature 30.1C ஆகும். 10 லட்சம் மக்கள் ஒரே இடத்தில் கூடி இருந்ததின் விளைவாக local Heat island effect காரணமாக மெரினா பகுதியின் வெப்பநிலை இன்னும் 2C உயர்ந்து இருந்திருக்கலாம்.

Wet Bulb Temperature 32C இருக்கும்போது ஆரோக்கியமான மனிதர்கள்கூட அந்த வெயிலை 6 மணி நேரம் மேல் தாங்க முடியாது என்கிறார்கள் அறிவியலாளர்கள். ஏற்கனவே உடல் பலவீனமானவார்கள் சில மணி நேரத்திலே சுருண்டு விழுந்திருக்கக் கூடும். மெரினாவில் இன்று நடந்திருக்கும் இந்த துன்ப நிகழ்வு நமக்கு Wet Bulb Temperature னால் வரும் காலங்களில் தமிழ்நாட்டிற்கு ஏற்படப் போகும் பாதிப்புகளுக்கான எச்சரிக்கை மணி”

- என்று சொல்லி இருக்கிறார்கள் ‘பூவுலகின் நண்பர்கள்’ அமைப்பு.

இதையெல்லாம் புரிந்து கொள்ளும் தன்மை இல்லாதவர்தான் எதிர்க் கட்சித் தலைவர் பழனிசாமி. ‘அரசின் அலட்சியப் போக்கே காரணம்’ என்று அவரது வழக்கமான வாய்ச் சவடாலை அடித்துள்ளார் அவர்.

இந்திய விமானப்படை கேட்ட அனைத்து வசதிகளையும் தமிழ்நாடு அரசு செய்து கொடுத்தது. தலைமைச் செயலாளர் தலைமையில் இரண்டு முறை ஒருங்கிணைப்புக் கூட்டம் நடந்துள்ளது. நூற்றுக்கணக்கான மருத்துவக் குழுக்கள் தயார் நிலையில் இருந்தது. 40 ஆம்புலென்ஸ்கள் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. ராஜீவ் காந்தி மருத்துவமனையில் 65 மருத்துவர்களும், 100 படுக்கைகளும், 20 தீவிர சிகிச்சை படுக்கைகளும் தயார்நிலையில் இருந்தது. சென்னையில் உள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும் முன்கூட்டியே தகவல்கள் தெரிவிக்கப்பட்டு சுமார் 4000 படுக்கைகள் தயார் நிலையில் வைத்திருந்ததாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் சொல்லி இருக்கிறார்.

வெயிலின் தாக்கம் காரணமாக அங்கேயே மரணமுற்றுள்ளார்கள் நால்வர். ஒருவர் மட்டும் மருத்துவமனைக்கு வந்து உயிரிழந்துள்ளார். இதை வைத்து அரசியல் லாபம் தேடப் பார்க்கிறார் பழனிசாமி. கூட்ட நெரிசல் காரணமாகவோ, அலட்சியம் காரணமாகவோ இந்த உயிரிழப்புகள் ஏற்படவில்லை என்பதை பழனிசாமி உணர வேண்டும்.

**நெரிசல் மரணத்துக்கும், அலட்சிய மரணத்துக்கும், அராஜக மரணத்துக்கும் ஆவண மரணத்துக்கும் தமிழ்நாட்டின் வரலாற்றில் சொல்லத்தக்க மரணங்கள் என்பவை மகாமக மரணங்கள் ஆகும். அம்மா ஜெயலலிதாவும் சின்னம்மா சசிகலாவும் லட்சக்கணக்கான மக்களை ஊருக்குள் உள்ளே விடாமல் காத்திருக்க வைத்து விட்டு ஒருவருக்கொருவர் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்ததன் காரணமாக 43 உயிர்கள் பலியானதை இன்னும் தமிழ்நாடு மறக்கவில்லை.**

1992 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 ஆம் தேதி இத்தகைய கொடூரத்தை ஜெயலலிதா செய்தார். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் நிகழ்ச்சி தான் கும்பகோணம் மகாமகம். அதனால் தமிழ்நாடு முழுவதும் இருந்தும் பக்தர்கள் வந்திருந்தார்கள். அவர்களை ஒழுங்குபடுத்த காவல் துறை திணறிக் கொண்டிருந்தபோது ஜெயலலிதா தனது தோழி சசிகலா வுடன் வந்தார். அவர்களுக்காக தனியாக குளியல் அறை கட்டப்பட்டது. முதலமைச்சர் ஜெயலலிதா வந்து நீராடும் வரை வேறு யாரும் நீராடக் கூடாது என்று தடை போடப்பட்டது. கட்டுக்கடங்காத கூட்டம் தடையை உடைத்து உள்ளே வந்து நீராடத் தொடங்கியது. தனக்கான தனி யறையை பயன்படுத்தாமல் குளத்தின் படிக்கட்டுகளில் அமர்ந்து குளிக்க முடிவெடுத்தார் ஜெயலலிதா. உள்ளே வந்து நீராட முடிவெடுத்து, குளத்தின் மேற்கு பகுதிக்கு வருகிறார் ஜெயலலிதா. இதனால் எந்தப் பகுதிக்கும் செல்ல விடாமல் மக்கள் தடுக்கப்படுகிறார்கள்.

குளத்துக்குள் உள்ளே வந்தவர்களால் வெளியே எந்தப் பக்கமும் போக முடியாத நெருக்கடி நிலை ஏற்பட்டது. உள்ளே இருந்தவர்கள் வெளியேற முடியவில்லை. வெளியில் இருப்பவர்கள் உள்ளே வர முடியவில்லை. மூச்சுத்திணறிக் கொண்டிருந்தார்கள் மக்கள். இரண்டு மணி நேரமாக முதலமைச்சர் ஜெயலலிதா நீராடிய பின் வெளியே வந்தார். காவல் துறை தடியடியைத் தொடங்கி, மக்களை தாக்கத் தொடங்கியது. கூட்ட நெரிசலும், அ.தி.மு.க. போலீஸ் தாக்குதலும் காரணமாக அரசின் கணக்குப்படி 48 உயிர்கள் பலியானார்கள்.

**தமிழ்நாடு வரலாற்றில் கருப்பு தினமாக இருக்கிறது மகாமகம் என்பதை மக்கள் மறக்கவில்லை.**



நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (07.10.2024) தலைமைச் செயலகத்தில் நீர்வளத் துறையின் அனைத்து மண்டல பொறியாளர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நீர்வளத் துறை கூடுதல் செயலாளர் திருமதி சு.மலர்விழி, நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சா.மன்மதன், நீர்வளத்துறை சிறப்பு செயலாளர் சு.ஸ்ரீதரன் மற்றும் அனைத்து மண்டல பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### அறிவிக்கப்பட்ட திட்டப் பணிகளையும்

# வெள்ளத் தடுப்புப் பணிகளையும் விரைந்து முடித்திடுவீர்!

## நீர்வளத்துறை ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் துரைமுருகன் வலியுறுத்தல்!

**சென்னை, அக்.9-**

**அரசால் அறிவிக்கப்பட்ட பணிகளையும், அனைத்து மண்டலங்களில் நடந்து வரும் வெள்ளத் தடுப்புப் பணிகளையும் விரைந்து முடித்திட வேண்டும் என்று நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.**

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தலைமையில், நேற்று முன்தினம் (07.10.2024) தலைமைச் செயலகத்தில் நீர்வளத் துறையின் அனைத்து மண்டல பொறியாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், அரசால் அறிவிக்கப்பட்ட திட்ட பணிகளில் மொத்தம் அறிவிக்கப்பட்ட பணிகள் - 1,379, முடிவுற்றப் பணிகள் - 802, முன்னேற்றத்தில் உள்ள பணிகள் - 577 அவைகளின் திட்டப் பணி வாரியாக ஆய்வு, “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” திட்டத்தின்கீழ், அறிவிக்கப்பட்ட பணிகளின் முன்னேற்றம், பாரம்பரிய நீர்வளத் துறை சின்னமாக விளங்கக்கூடிய அணைகள் திட்டங்களின் முன்னேற்ற விவரங்கள், நீர்வளத் துறையின் முன்னோடியான திட்டங்கள் குறித்த முன்னேற்றம், அனைத்து மண்டலங்களிலும் நடைபெற்று வரும் வடகிழக்கு பருவ மழை முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் நிரந்தர வெள்ளத்தடுப்புப் பணிகளின் முன்னேற்றம் குறித்து அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், அமைச்சர் அவர்கள் அரசால் அறிவிக்கப்பட்ட திட்ட பணிகள் தொய்வின்றி இந்த நிதியாண்டுக்குள் விரைந்து முடிக்குமாறும், “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட பணிகளை வருகின்ற 31.12.2024க்குள் முடிக்குமாறும் மேலும் அனைத்து மண்டலங்களில் நடைபெற்று வரும் வெள்ளத்தடுப்புப் பணிகளை வருகின்ற 15.10.2024க்குள் முழுமையாக முடிக்குமாறும் “முதல்வரின் முகவரி” மனுக்களை உடனடியாக தீர்வு செய்யுமாறும், திட்டப் பணிகளில் “நீங்கள் நலமா” பயனாளிகளிடம் பேசிய விவரங்களை தெரிவிக்குமாறும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நீர்வளத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், திருமதி சு.மலர்விழி, நீர்வளத்துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சா.மன்மதன், நீர்வளத் துறையின் சிறப்பு செயலாளர் சு.ஸ்ரீதரன் மற்றும் அனைத்து மண்டல பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் கலந்துகொண்டனர்.

### மதுரை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் – உலகத் தமிழ்ச் சங்கம் நடத்தும்

# ‘முத்தமிழ் முகாம்’ - ஒருநாள் தேசியக் கருத்தரங்கம்!

## ஔவை அருள் தலைமையில் விஜயா தாயன்பன் சிறப்புரை!

மதுரை, அக். 9-

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் உலகத் தமிழ்ச் சங்கம் இணைந்து நடத்தும் ஒருநாள் தேசியக் கருத்தரங்கம் மதுரையில் நடைபெறுகிறது.

மதுரையில் இன்று (9.10.2024, புதன் கிழமை) காலை 10 மணிக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் உலகத் தமிழ்ச்சங்கம் இணைந்து நடத்தும் ஒருநாள் தேசியக் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

உலகத்தமிழ்ச் சங்க ஆய்வு வளமையர் முனைவர் ஐ.ஜான்சி ராணி வரவேற்புரை நிகழ்த்த,

உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் ஔவை அருள் தலைமையுரை ஆற்றுகிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் - செயலர் திருமதி விஜயா தாயன்பன் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.

மேலும் இதில் கவிஞர் நெல்லை ஜெயந்தா ‘மலர்ச்சியூட்டும் இயற்றமிழ்’ என்ற தலைப்பிலும்,

கலைமாமணி தாயன்பன் ‘மயக்கமூட்டும் இசைத்தமிழ்’ என்ற தலைப்பிலும், முனைவர், திரைப்பட நடிகர் சண்முக ராஜா ‘மகிழ்வூட்டும் நாடகத் தமிழ்’ என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்துகின்றனர்.

மதுரை உலகத் தமிழ்ச்சங்க ஆய்வறிஞர் முனைவர் சு.சோமசுந்தரி நன்றியுரை ஆற்றுகிறார்.

